பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

26 11 2024 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- அரசியல் சாசனத்தின் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நாடு எதிர்கொண்டிருப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

- இந்தியா உலக அளவில் வலுவான ஜனநாயகமாக திகழ்வதற்கு நாட்டின் அரசியல் சாசனமே காரணம் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்ஜீவ் கண்ணா கூறியுள்ளார்.

- அரசு செயல்பாடுகள் தொடர்பான ரகசிய தகவல்களை இணையம் மற்றும் ஸ்மார்ட் போன் வாயிலாக பரிமாறிக்கொள்ள வேண்டாம் என்று ஜம்மு காஷ்மீர் அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

- லெபனானுடன் போர் நிறுத்தம் மேற்கொள்வது தொடர்பாக இஸ்ரேலிய அமைச்சரவையின் ஆலோசனை கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

- வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<>>>>>**

அரசியல் சாசனத்தின் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நாடு எதிர்கொண்டிருப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

அரசியல் சாசன தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி, நாடாளுமன்ற மைய மண்டபத்தில் இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் அவர் இன்று உரையாற்றினார்.

அரசியல் சாசனத்தை வடிவமைத்ததில் அரசியல் சாசன நிர்ணயக்குழுவில் இடம்பெற்ற 15 பெண் உறுப்பினர்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று அப்போது அவர் நினைவு கூர்ந்தார்.

பெண்களுக்கான இடஒதுக்கீட்டு சட்டமானது பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் புதிய அத்தியாயமாக அமையும் என்று குடியரசுத் தலைவர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்ச்சியின்போது, அரசியல் சாசனத்தின் மைதிலி, சமஸ்கிருத பதிப்புகளை அவர் வெளியிட்டார்.

இந்திய அரசியலமைப்பு சட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு 75-வது ஆண்டு கொண்டாட்டதையொட்டி சிறப்பு நாணயம் மற்றும் சிறப்பு தபால் தலையும் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், குடியரசு துணைத்தலைவர் திரு ஜெகதீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா, மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்..

இத்தினத்தையொட்டி, பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், அரசியல் சாசனம் தேசத்திற்கு வழிகாட்டும் ஒளியாக திகழ்கிறது என்று கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தலைமையில், சென்னை தலைமைச் செயலகத்தில் அரசியல் சாசன முகப்புரை வாசித்து உறுதிமொழி ஏற்கப்பட்டது.

மத்திய மற்றும் மாநில அரசு அலுவலகங்களில் பணியாளர்கள் மற்றும் அதிகாரிகள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

<<<<<>>>>>

இந்தியா உலக அளவில் வலுவான ஜனநாயகமாக திகழ்வதற்கு நாட்டின் அரசியல் சாசனமே காரணம் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்ஜீவ் கண்ணா கூறியுள்ளார்.

அரசியல் சாசன தினத்தையொட்டி, உச்சநீதிமன்ற வழக்கறிஞர்கள் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் அவர் பங்கேற்று பேசினார்.

சுதந்திரத்திற்கு பிறகு இந்திய ஜனநாயகத்தில் அரசியலமைப்பின் பங்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்றும், அதன் காரணமாக உலக அளவில் நாடு குறிப்பிடத்தக்க நிலையை எட்டியுள்ளதாகவும் திரு சஞ்ஜீவ் கண்ணா கூறினார்.

<<<<<>>>>>

அரசியல் சாசன தினத்தையொட்டி, புதுதில்லியில் உச்சநீதிமன்றம் சார்பில் இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்கிறார்.

இன்று மாலை 5 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் நீதித்துறையின் ஆண்டு அறிக்கையை வெளியிட்டு அவர் உரையாற்ற உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மேக்வால், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சஞ்சீவ் கண்ணா மற்றும் நீதிபதிகள் பங்கேற்கின்றனர்.

<<<<<>>>>>

மும்பை பயங்கரவாத தாக்குதல் தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலில் உயிரிழந்த பாதுகாப்புப் படை வீரர்களுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், நாட்டு மக்களைப் பாதுகாக்கும் பணியில் உயிர்த் தியாகம் செய்த பாதுகாப்புப்படையினருக்கு நாடு தலைவணங்குவதாக தெரிவித்துள்ளார்.

அனைத்து வடிவிலான தீவிரவாத செயல்பாடுகளை முறியடிப்பதில் இந்தியா உறுதிபாட்டுடன் செயல்பட்டு வருவதாக குடியரசுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மும்பை தாக்குதலின்போது தைரியம் மற்றும் தியாக உணர்வுடன் எதிர்த்து சண்டையிட்ட பாதுகாப்புப்படையினரை நாடு என்றும் நினைவில் கொண்டிருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

இத்தினத்தையொட்டி, மும்பையில் உள்ள இந்தியாவுக்கான இஸ்ரேல் தூதர் திரு **Kobbi Shoshani** தாக்குதல் நடந்த இடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

<<<<<>>>>>

அரசு செயல்பாடுகள் தொடர்பான ரகசிய தகவல்களை இணையம் மற்றும் ஸ்மார்ட் போன் வாயிலாக பரிமாறிக்கொள்ள வேண்டாம் என்று அதிகாரிகளுக்கு ஜம்மு காஷ்மீர் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதுதொடர்பாக, வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில், சில மின்னஞ்சல்கள், தகவல் பரிமாற்ற செயலிகள், ரகசிய தகவல்களை பரிமாறுவதற்கான பாதுகாப்பினை கொண்டிருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தரவு கசிவு மற்றும் முறைகேடுகளுக்கு வழிவகுக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், அரசு மின்னஞ்சல் வசதி மற்றும் சம்வாத், சந்தேஷ் உள்ளிட்ட அரசு தளங்களை அதிகாரிகள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

**Essar** குழும இணை நிறுவனரான தொழில் அதிபர் **Shashikant Ruia** நேற்றிரவு மும்பையில் காலமானார். அவருக்கு வயது 81.

அவரது மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

நாட்டில் வணிக செயல்பாட்டை மேம்படுத்தியதில் சசிகாந்தின் பங்களிப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று தமது இரங்கல் செய்தியில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

நான்கு நாள் பயணமாக நாளை தமிழகம் வரும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குன்னூர், உதகமண்டலம், திருவாரூரில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

இதனையொட்டி, நீலகிரி மாவட்டத்தில் பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அம்மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என் எஸ் நிஷா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - நிஷா – 38 செகண்ட்ஸ்)*

குடியரசுத் தலைவர் வருகையையொட்டி, அப்பகுதியில் ட்ரோன் பயன்படுத்த தடைவிதிக்கப்பட்டுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

கேரளாவின் திரிச்சூர் மாவட்டத்தில் இன்று காலை நேரிட்ட சாலை விபத்தில், இரண்டு குழந்தைகள் உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர்.

நாட்டிகா என்னுமிடத்தில் சாலையோரம் தூங்கிக்கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது கனரக வாகனம் ஒன்று மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த ஏழு பேருக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும், விபத்து குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

<<<<<>>>>>

லெபனானுடன் போர் நிறுத்தம் மேற்கொள்வது தொடர்பாக இஸ்ரேலிய அமைச்சரவை இன்று ஆலோசனை கூட்டம் ஒன்றை மேற்கொள்கிறது.

டெல்அவிவ்-வில் உள்ள பாதுகாப்புப்படை தலைமையகத்தில் நடைபெறும் இந்த கூட்டத்திற்கு அந்நாட்டு பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு ஒப்புதல் அளித்துள்ளார்.

போர் நிறுத்தம் தொடர்பாக இஸ்ரேலிய அமைச்சரவை வாக்கெடுப்பு மேற்கொள்ளும் என்று திரு நெத்தன்யாகுவின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் ஹெஸ்புல்லா அமைப்பை ஒடுக்கும் வாய்ப்பை தவறவிடும் என்றும், இது ஒரு வரலாற்று தவறாக அமையும் என்றும் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் **Itamar Ben** தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்துள்ளது.

இதன் காரணமாக, சென்னை, திருவள்ளுர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் இன்று முதல் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமுதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் வடகடலோர மாவட்டங்களிலும், டெல்டா மாவட்டங்களிலும் அவ்வப்போது மிக கனமழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடலோர பகுதிகளில் கடல் சீற்றம் வழக்கத்தைவிட அதிகமாக காணப்படும் என்றும், அந்த பகுதியில் உள்ள மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மணிக்கு 12 கிலோமீட்டர் வேகத்தில் தமிழகத்தை நோக்கி நகர்வதாகவும், நாளை இது புயலாக மாறக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் நாகப்பட்டினத்திலிருந்து 590 கிலோமீட்டர் தொலைவிலும், சென்னையிலிருந்து 800 கிலோமீட்டர் தொலைவிலும் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மையம் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சையது மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டி லக்னோவில் இன்று தொடங்குகிறது.

டிசம்பர் ஒன்றாம் தேதி வரை நடைபெற உள்ள இப்போட்டியில் இந்தியா, சீனா, தாய்லாந்து உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

<<<<<>>>>>

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டி மஸ்கட்டில் இன்று தொடங்குகிறது.

இதில் இந்தியா, ஜப்பான், கொரியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகள் பங்கேற்கின்றன.

நாளை நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா – தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

<<<<<>>>>>

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் மும்பையில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை அணி - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

<<<<<>>>>>

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் உத்தரப்பிரதேசம் - தமிழக அணியையும், தில்லி - பட்னா அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<<>>>>>